# பாசிசத்தை வீழ்த்தும் பாசறை!

இந்தியாவில் இரண்டு வகை இனங்களின் இருப்பை 'ஆரியர்' என்றும், 'திராவிடர்' என்றும் வரலாற்று ஆராய்ச்சி யாளர்கள் பன்னெடுங் காலமாக ஆய்வு செய்து பல்வேறு கூறுகளை நிரல் படுத்தி நிறுவியுள்ளனர்.

இன்று ஆர்.எஸ்.எஸ், கொண்டாடும் பல தலைவர்களும் கூட இவ்விரு இன அடிப்படையிலான கலாச்சாரக் கூறுகளை மறுக்கவில்லை. நில எல்லை, மொழிக்குடும்பம், கலை இலக்கிய பண்பாட்டுக் கூறுகள் என்று எல்லாத் தளங்களிலும் வெவ்வேறு தன்மைகளையும் இவற்றில் ஒத்த பண்புகளையும் கூட கொண்டவையாக இவ்விரு இனங்கள் வாழ்ந்ததற்கானத் தரவுகள் ஆய்வாளர்களால் அறுதியிடப்பட்டுள்ளன; என்றாலும் பண்பாட்டுப் படையெடுப்பால் - தவிர்க்கமுடியாத இனக் கலப்பால் இவ்விரு இனங்களும் இரண்டறக் கலந்து விட்டன என்றும்,

அதனால் ஆரிய-திராவிட பேதம் **ஓர் அரசியல் வன்மம்** என்றும் **வரலாற்றுப் பித்தலாட்டம்** என்றும் இன்று சிலரால் ஒரு முற்சார்பு (Prejudice) வாதம் நாடாளுமன்றம் வரை வைக்கப்படும் ஆபத்தான சூழ்நிலையில், இத்தகைய வரலாற்றுப் புரட்டுகளை வீழ்த்திட, புதிய உத்தியும் புனருத்தாரன சிந்தனையும் இன்றியமையா தேவையாகிறது.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தென்னகத்தில் குறிப்பாக தமிழ்நாட்டின் அரசியல், **'திராவிடம்' 'திராவிடர்''தமிழ்'** என்று முறையே நிலம், இனம், மொழி எனும் அடிப்படையில் தன்னை தகவமைத்துக் கொண்டு, அதன் வரலாற்று வேர்களாக **'ஆரிய மறுப்பை'** முன்னிறுத்தியே நகர்ந்து வந்துள்ளது.

இன மேன்மையை பிறப்பின் அடிப்படையில் வலியுறுத்தி, சமூகத்தின் அனைத்து வசதிகளையும் உரிமைகளையும் தனதாக்கிக் கொள்ள, மொழி, பண்பாட்டுக் கட்டுமானங்களிலும், வழிபாட்டு முறைகளிலும் ஊடுருவி, தமிழர்களைச் சிறுமைப் படுத்தி, அவர்களின் மீது அதிகாரம் செலுத்திய ஆரியக் கோட்பாடு, இங்கு இன்னொரு வடிவத்தில் வந்த பாசிசமாகவே அரசியலில், நிர்வாகத்தில், சமூகத் தளத்தில் இயங்கியதை எதிர்கொள்ள பிராமணர் அல்லாதார் இயக்கத்தவர்கள் எடுத்த ஆயுதம்தான் திராவிடம்!

பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் இங்கு நிறுவிய,

★ **வரலாற்றின் அடிப்படையிலான திராவிடம்**

★ **மொழிக்குடும்ப அடிப்படையிலான திராவிடம்**



★ **பண்பாட்டுக் கூறுகள் அடிப்படையிலான திராவிடம்**

★ **செழுமை வாய்ந்த உலக நாடுகளின் நாகரிகத்தில் ஒன்றாக உணரப்பட்ட திராவிடம்.**

என்பவை ஒன்றியத்தில் அமையப்பெற்ற பா.ஜ.க. ஆட்சிக்குப் பிறகு இன்று வெவ்வேறு விதமாகத் திரிக்கப்பட்டு மறைக்கப்பட்டு, 'திராவிடமே பொய்' எனும் உள்ளீடற்ற வாதத்திற்கு உள்ளான போது, மோடியின் முகம் எது, அவருக்குப் பின்னால் நிற்கும் தத்துவத்தின் வடிவம் எது, என்று இன்னமும் முழுமையாக உணராமல் எதிர்க்கட்சித் தலைவர்கள் திண்டாடியபோது, அதை, **'பாசிசம்'** என்று இங்கு வரையறுத்துப் பிரகடனப்படுத்திய ஒரே அரசியல் தலைவர் நம் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தாம்!

'A able leader must see; Which is not visible to others' என்று ஆங்கிலத்தில் ஒரு தொடர் உண்டு. மற்றவர்களுக்குப் புலப்படாத ஒன்று, ஒரு நல்ல தலைவருக்குப் புலப்படவேண்டும் என்று!

**மத அடிப்படையிலான - இனமேன்மையை வலியுறுத்தும், ஆரிய பாசிசத்தை கோல்வால்கரில் தொடங்கி மோகன்பகவத் வரை தத்துவப் பிதாமகன்களாக ஏற்றுக் கொள்ளும் இன்றைய பா.ஜ.க.வும், அதன் ஆட்சித் தலைவர்களும், இங்கு நடைமுறைப் படுத்தி, இதை 'இந்து நாடாக' மாற்றி, உழைக்கும் வர்க்கமான 'சூத்திரர்களையும்' 'மதச் சிறுபான்மையின ரையும்' அடிமைப்படுத்தி தன் ஆதிக்கத்தை நிறுவ முயன்று, ஓரளவுக்கு அதில் வெற்றியும் பெற்றுவிட்ட 'இந்து பாசிச' வடிவத்தை எதிர்கொள்ளும் எதிர் மருந்தை** (Antidote) **அரசியல் அரங்கில் முன்னெடுத்த மகத்தான ஒரே தலைவர் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!**

**ஆம், இப்போது**

**எது திராவிடம்?**

**ஏன் திராவிடம்?**

**எதனால் திராவிடம்?**

என்ற புதிய சிந்தனையைச் செலுத்தி, திராவிடத் தத்துவத்தின் அடிநாதம் சிதையாமல் திருத்தி அமைக்கப்பட்ட அரசியல் அருமருந்துதான் அய்ந்து கூறுகள் அடங்கிய 'திராவிடம்'

1. **சமத்துவம்**
2. **சுயமரியாதை**
3. **மதச்சார்பின்மை**
4. **கூட்டாட்சித் தத்துவம்**
5. **தேசிய இனங்களை அங்கீகரித்தல்**

இவைதான் திராவிடம் என்று சட்டமன்றத்திலும் வெளியிலும் அதிகாரப் பூர்வமாய் அறிவித்த தத்துவத் தலைவர் அவர்!



ஆ.இராசா எம்.பி.
கழக துணைப் பொதுச் செயலாளர்

இந்த அய்ந்து கூறுகளில்

★ **பெரியார் வாழ்கிறார்; முதல் இரண்டில்!**

★ **அண்ணா நிற்கிறார்; அடுத்த இரண்டில்!**

★ **கலைஞர் ஆள்கிறார்; அய்ந்தாவது கூறில்!**

இவை மட்டுமல்ல; இந்த அய்ந்தையும் ஆரியம் ஒருபோதும் ஏற்காது என்பதுதான் தலைவர் கண்டெடுத்த அரசியல் தத்துவ உத்தி! இந்த அரசியல் சிந்தனைத் தெளிவு இன்று 'இந்தியா' கூட்டணிக்கு மட்டுமன்று; **இந்தியாவிற்கே** தேவைப்படுகிறது.

**எனவே, அவர் தனிமனிதரல்லர் ! பாசிசம் வீழ்த்தும் பாசறை!!**

**71 வது பிறந்த நாள் காணும் தலைவர் பல்லாண்டு வாழ்க! திராவிடம் வெல்க!!**

# சூரியன் பிறந்த நாள்!

சூரியன் பிறந்த நாளைப்
பகல்கள் கொண்டாடுவது போல்
நீரின் பிறந்தநாளை
வேர்கள் கொண்டாடுவதுபோல்
தளபதி பிறந்த நாளைத்
தமிழர்கள் கொண்டாடுவோம்!

**இயலின் பிறந்த நாளை**
**ஏடுகள் கொண்டாடுவதுபோல்**
**இசையின் பிறந்த நாளை**
**வீணைகள் கொண்டாடுவதுபோல்**
**நாட்டியத்தின் பிறந்த நாளை**
**சலங்கைகள் கொண்டாடுவதுபோல,**
**தளபதி பிறந்தநாளைத்**
**தமிழர்கள் கொண்டாடுவோம்!**

அண்ணா பிறந்த நாளைப்
புத்தகங்களால் கொண்டாடுவோம்
கலைஞர் பிறந்தநாளை
எழுதுகோலால் கொண்டாடுவோம்
முதல்வர் தளபதி பிறந்தநாளை
எப்படிக் கொண்டாடுவது?
குழந்தைகள் பெண்கள் ஏழைகள்
மாணவர்கள்
யாவர்க்குமான நலத்திட்டங்களால்
கொண்டாடுவோம்.

**இவர் காலத்தில்தான்**
**வீடுதேடிக் கல்வி போகிறது**



**வீடுதேடி மருத்துவம் போகிறது**
**வீடுதேடி**
**உரிமைத் தொகைகள் போகின்றன**
**வீடுதேடித் தக்க அறிஞர்க்கும்**
**கவிஞர்க்கும் வீடே போகிறது?**
**எல்லாம்**
**முறையாகப் போகின்றனவா**
**என்று பார்க்க முதல்வரே வீடுதேடி போகிறார்!**
**எனவே**
**மக்கள் முதல்வரை வாழ்த்த**
**வானை அழைப்போம்**
**கடல்களை அழைப்போம் மலைகளை**
**அழைப்போம்**

தளபதியை வாழ்த்துவது போலவே
அவரை எதிர்ப்பவரையும் வாழ்த்துவோம்
ஏனெனில்
எப்போதும் தோற்பதற்கான
வாய்ப்புகளை அதிகம் அதிகமாய்ப்
பெற்றவர்கள் அவர்கள்.

தளபதி பிறந்த, நாள் இன்று
கோடி தொட்டில்கள் தாலாட்டுப் பாடல்கள்
கட்டிவரும்.
தயாளுத் தாயின் மடியில்
தளபதி கிடந்த, நாள்கள் திரும்பி வருகின்றன
புன்னகையோடும்
புதுமலர்க் கொத்துகளோடும்.

தயாளம்மா வயிறு
தளபதிக்கு முதல் கருவறை
கழகமே இரண்டாம் கருவறை!
முதல்கருவறை
பெற்றெடுத்தது மகனாக!
இரண்டாம கருவறை அவரை
ஈன்றெடுத்தது முதல்வராக!



கவிப்பேரருவி
ஈரோடு தமிழன்பன்

எனவே,
**நீரின் பிறந்தநாளை**
**வேர்கள் கொண்டாடுவதுபோல**
**தளபதிச்**
**சூரியன் பிறந்த நாளைப்**
**பட்டப் பகல்களாகக் கொண்டாடுவோம்!**